# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 6/2025

## Deposition of P.W. 2

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. C. Regu** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **07.08.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வனச்சரகம், திருச்செந்தூர் பிரிவு வனவராக பணியாற்றிவருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது களியல் வனச்சரகத்தில், மருதம்பாறை பிரிவில் வனக்காப்பாளராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கில் உள்ள எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 30.03.2019 ம் தேதி இரவு 08.00 மணியளவில் வனவர் திரு. ஜெயக்குமார் தலைமையில் வனக்காப்பாளராகிய நானும், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் திரு. மணிகண்டன்

அவர்களுமாக களியல் வனச்சரக அலுவலகத்தில் இருந்து கடையாலுமூடு சந்திப்பில் இருந்து மாஞ்சக்கோணம் செல்லும் பாதையில் ரோந்து சென்றபோது கோதையாறு ஆற்றுப்பாலத்திற்கு வடக்கு பக்கம் உள்ள மாதா குருசடி அருகாமையில் ஒரு டெம்போ வருவதை பார்த்தேன். நாங்கள் டார்ச் அடித்து பார்த்தபோது டெம்போவை நடு ரோட்டிலேயே விட்டு டெம்போ ஓட்டுநரும் கூட இருந்த நபர்களும் இறங்கி ஓடி இருட்டிற்குள் மறைந்தார்கள். நாங்கள் பிடிக்க முயன்றும் முடியவில்லை. பின்பு வாகனத்தை சோதனை செய்தபோது, வாகனத்தில் பச்சை தேக்கு மரத்துண்டுகள் புறம்பட்டை கருகிய நிலையில் உள்ள தேக்கு கட்டைகள் கயிறால் கட்டி வைக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் பதிவெண் பார்க்கும்போது TN 72 Z 0950 ஆகும். வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தின் சாவி வாகனத்திலேயே இருந்தது. அங்கிருந்து ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் திரு.மணிகண்டன் அவர்கள் டெம்போவை ஓட்டி குலசேகரம் வனச்சரகத்திற்கு கொண்டு சென்றோம். இரவு என்பதால், அங்கேயே பாதுகாப்பில் விட்டுவந்தோம். 31.03.2019 அன்று வாகனத்தை சோதனை செய்து, வாகனத்தின் Engine No, Chasis No. பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்தபோது வாகனத்தை விட்டுச்சென்ற நபர்கள் ஓட்டுநர் ஜெகன் மற்றும் உடன் இருந்தது தாஸ் என்பது தெரியவந்தது. பின்பு வண்டியில் இருந்த மரத்துண்டுகளை கீழே இறக்கி அளவீடு செய்யப்பட்டு, சிகப்பு பெயிண்டால் வரிசை எண் போடப்பட்டது. 75 மரத்துண்டுகள் இருந்தது. பின்பு வனவர் திரு. ஜெயக்குமார் அவர்களால் எச்.நமூனா தயார் செய்து, வனக்குற்றம் பதிவு செய்யப்பட்டது. வனவழக்கு

சம்பந்தப்பட்டஆவணங்கள் மற்றும் பிடிபொருட்கள் களியல் வனச்சரக அலுவலர் இடத்தில் ஆஜர்படுத்தி, STOR. No. 1/2019 வனக்குற்ற எண் பெற்று, நாகர்கோவில் தனி சிறப்பு வனவழக்கு நீதிமன்றத்தில் வனவழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இது சம்பந்தப்பட்ட ஸ்தல மகசரில் நான் கையொப்பம் செய்தேன். பின்பு 01.04.2019 அன்று சம்பந்தப்பட்ட மரத்துண்டுகள் மாவட்ட உதவி வன பாதுகாவலர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 07.06.2019 அன்று நாகர்கோவில் நீதிமன்ற உத்தரவுப்படி எதிரிகள் வனச்சரகத்தில் ஆஜராகி வழக்கு சம்பந்தமாக விசாரித்தோம். எதிரிகள் காண்பித்த இடத்தை தணிக்கை செய்தோம். அந்த இடம் முழுக்கோடு கிராம புல எண். 15/3 ராஜேந்திரன் என்பவருக்கு சொந்தமான பட்டா நிலம் ஆகும். அந்த இடத்தில் 9 தேக்கு மரங்கள் வெட்டப்பட்டிருந்தது. அந்த தேக்கு மர வெட்டுமோட்டின் சுற்றளவும், டெம்போவில் கொண்டு வந்த தேக்கு மரத்தின் மூட்டுதுண்டுகளும் ஒப்பிட்டு பார்த்தபோது அளவுகள் பொருந்தவில்லை. அந்த இடத்தில் தீப்பிடித்ததற்கான எந்த விதமான அறிகுறியும் இல்லை. இது சம்பந்தமாக வனவர் திரு. ஜெயக்குமார் சம்பவ இடத்திலேயே ஸ்தல மகசர் தயார் செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். ஸ்தல மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கில் பிடிபட்ட மரத்துண்டுகள் அனைத்தையும் கன்னியாகுமரி மாவட்ட உதவி வன பாதுகாவலர் அலுவலகத்தில் ஒப்படைத்தோம்.